EQUAL GROUND

# கொள்கைச் சுருக்கம்

# “புதிரிலிருந்து தவறவிடப்பட்ட ஒரு பகுதி” : இலங்கையின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கைகள் - LGBTIQ உரிமைகள் கண்ணோட்டத்திலான பகுப்பாய்வு

© EQUAL GROUND 2022

எழுதியவர்: : சாரா அர்ஜூமன் சௌத்ரி

*பொறுப்புத் துறப்பு: ஈக்வல் க்ரௌண்ட் (EQUAL GROUND) (EG) அனைத்து அரசு மற்றும்/அல்லது தேசிய அளவிலான கொள்கைகள் மற்றும் சட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்குவதற்கு உரிமை கோரவோ அல்லது பொறுப்பேற்கவோ இல்லை. ஈக்வல் க்ரௌண்ட் ஆனது எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் அணுகக்கூடிய ஆவணங்களை மதிப்பாய்வு செய்யவே முயற்சித்துள்ளது.*

## பகுத்தறிவு

தன்பாலீர்ப்பின பெண்கள், தன்பாலீர்ப்பின ஆண்கள், ஈர்பாலீர்ப்பினர்கள், திருநர்கள். இடையிலிங்கத்தவர்கள், பால் புதுமையர்கள்/வினவினர் (LGBTIQ) மக்கள் உட்பட அனைவருக்குமான சமத்துவம் மற்றும் அவர்களை இணைத்தல் என்பவற்றை உறுதி செய்வது மனித உரிமைகள் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல, அது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி சார்ந்த பிரச்சினையும் ஆகும்.

LGBTIQ நபர்கள் மீதான பாகுபாடு மற்றும் களங்கம் என்பன அவர்கள் புறக்கணிக்கப்படுவதற்கு வழிவகுக்கிறது, இதன் விளைவாக மனித மூலதனம் வீணடிக்கப்படுவதுடன் இது இறுதியில் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கான குறைந்த உற்பத்தித்திறனையும் ஏற்படுத்துகிறது. 2030 ஆம் ஆண்டளவில் இலங்கை அரசாங்கம் அடைய விரும்பும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைவதற்கான நிகழ்ச்சி நிரலையும் இது குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. “சமூகத்தில் சேர்த்துக்கொள்ளல் என்பது அதிகம் முக்கியம் வாய்ந்தது. ஏனெனில், நீக்குவது என்பது மிகவும் விலை உயர்ந்தது” என்பது சமீபத்திய உலக வங்கி அறிக்கையின் முடிவாகும்.

பல்வேறு சர்வதேச உடன்படிக்கை அமைப்புகளும் மன்றங்களும் வயது வந்தோரின் சம்மதத்துடன் ஒரே பாலின பாலுறவுச் செயல்களை குற்றமாக கருதும் பாரபட்சமான சட்டங்களை மாற்ற வேண்டும் என்பதனை இலங்கை அரசாங்கத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வரும் அதே வேளையில், அரசாங்கம் அத்தகைய முறையீடுகளை புறக்கணித்துள்ளது அல்லது இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் LGBTIQ மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதாக கூறுகிறது. இந்தக் கொள்கைச் சுருக்கத்தில் EQUAL GROUND, அரசாங்கத்தின் உரிமைகோரல்களின் நம்பகத் தன்மையைக் கண்டறிய, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான அரசாங்கச் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மதிப்பாய்வு செய்ய முயல்கிறது.

மற்ற காரணிகளில், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கல்வியும் வேலை வாய்ப்பும் இன்றியமையாதது. களங்கம் மற்றும் தொன்மையான சமூக விதிமுறைகளில் வேரூன்றியமையினால் LGBTIQ நபர்களைப் புறக்கணிப்பதாவது, பொருளாதார ரீதியில் நிச்சயமாக விலை உயர்ந்ததாகும், ஏனெனில் அவர்களைப் புறக்கணிப்பதினால் உற்பத்தித்திறன் குறைந்து ஆக்க அளவில் பெரும் விளைவை ஏற்படுத்துகின்றது. எனவே, அத்தகைய விலக்குதலின் அளவை மதிப்பிடும் போது, தற்போதுள்ள தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை, குறிப்பாக கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பானவற்றை ஆராய்வது, இப் பிரச்சினையினை பகிரங்கப்படுத்தக் கூடியதாக உள்ளது.

# கல்வி

இளைஞர்கள் பொது மனித மூலதனத்தைப் பெறுவதற்கான முதன்மை அமைப்பாக கல்வி காணப்படுகிறது. இதில் திறன்கள், இயலுமை, அறிவு மற்றும் ஆரோக்கியம் ஆகியவை அதீத உற்பத்தி மற்றும் பொருளாதாரம் என்பவற்றின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். புறக்கணிப்பு மற்றும் களங்கம் அத்தகைய மனித மூலதனத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகளை இழக்கப்பதற்கு வழிவகுக்கிறது. எனவே இது எதிர்காலப் பொருளாதார உற்பத்தியைக் குறைக்கும்.

ஈக்வல் க்ரௌண்ட் (2017) நடத்திய விவரணையாக்க ஆய்வில், பதிலளித்த ஒட்டுமொத்த LGBTIQஇனரில் 29% பேர் மட்டுமே பல்கலைக்கழக அளவிலான கல்வியினை (இளங்கலைப் பட்டம்) பெற்றுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. இது கவலைக்குரிய விடயமாகும், ஏனெனில் வேலைச் சந்தையானது கொடூரமான போட்டித்தன்மையுடன் காணப்படுகிறது. அத்துடன் பட்டதாரிகள் கூட ஒரு கண்ணியமான வேலையைப் பெறுவதற்காகப் போராடுகின்றனர். ஈக்வல் க்ரௌண்ட் மற்றொரு சமீபத்திய விவரணையாக்க ஆய்வினை (2021) இல் நடாத்தியது, இதில் பதிலளித்த LGBTIQ இனர் கல்வி நிறுவனங்கள் ஆதரவான கற்றல் சூழலினைக் காட்டிலும் அடக்குமுறை சூழலினையே கொண்டிருப்பதாக விவரித்துள்ளனர். குணசேகராவின் மற்றொரு ஆய்வில் (2021), உடல் தோற்றம், களங்கம் மற்றும் வித்தியாசமாக இருத்தல் என்பன (உடல்/மனரீதியாக) சக மாணவர்களால் கொடுமைப்படுத்தப்படுவதை நிர்ணயிக்கும் காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. பாடசாலை நாட்களிலேயே சில LGBTIQ நபர்கள் பாலியல் நாட்டம் அல்லது பாலின அடையாளம் அல்லது வெளிப்பாடு (SOGIE) தொடர்பான தங்கள் வேறுபாடுகளை முதலில் ஒப்புக்கொள்ளத் தொடங்கினர் என்பதும் விவரணையாக்க ஆய்வில் தெரிய வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. “வேறுபட்டவர்களாக” அல்லது புறக்கணிக்கப்பட்டவர்களாக உணர்வது, அத்துடன் கொடுமைப்படுத்துதல் என்பன இம் முக்கியமான கால கட்டத்தில் ஒரு நபரின் மன ஆரோக்கியம், சமூக திறன்கள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆய்வின் படி, பல LGBTIQ நபர்கள் பாடசாலையில் படிக்கும் நாட்களில் ஒடுக்கப்பட்ட, தனிமை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வை விவரித்துள்ளனர். வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியினை வளர்க்கும் ஒரு ஆதரவான கற்றல் சூழலாகப் பாடசாலை இருக்க வேண்டும் என்பதனால் இது கவலைக்குரிய பிரச்சினையாகும்.

அனைவருக்குமான கல்விக்கான உரிமையினை அரசியலமைப்பு உத்தரவாதம் செய்கிறது. ஆனால் விரிவான பாலியல் கல்வி (CSE), கொடுமைப்படுத்துதலுக்கான எதிர்ப்பு மற்றும் பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாட்டுக்கான துன்புறுத்தல் சார்ந்த கொள்கை போன்ற சிக்கல்களை முன்வைக்கும் போது முரண்பட்ட சிக்கல்கள் எழுகின்றன.

யுனிசெப் மற்றும் நெதர்லாந்து அரசு என்பன 2012-2016 இல் புருண்டி, சாட், கோட் டிவோர், டெம், காங்கோ, எத்தியோப்பியா, லைபீரியா, மியான்மர், பாக்கிஸ்தான், சியரா லியோன், சோமாலியா, தென் சூடான், பாலஸ்தீன மாநிலம், உகாண்டா மற்றும் யெமன்), ஆகிய 14 நாடுகளுடன் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், கல்வி மற்றும் பரிந்து பேசுதல் தொடர்பான திட்டத்தினை (PBEA) மேற்கொண்டன. மற்றும் இம் முயற்சியின் குறிகாட்டிகளில் ஒன்றாகக் கல்வி நிறுவனங்களில் காணப்படும் வேறுபாடுகள் மற்றும் பன்முகத்தன்மை சார்ந்த சகிப்புத் தன்மையை மதிப்பிடுவதும் அதிகரிப்பதும் ஆகும். முரணாக ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடாக இருந்த போதிலும் இலங்கை இம் முயற்சியில் இணைந்து கொள்ளவில்லை.

1990களில் கொழும்பு பல்கலைக்கழகம் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான கொள்கையினைத் தயாரித்தது. அதேவேளை களனிப் பல்கலைக்கழகத்தின் சில கல்வியாளர்கள் பாலின சமத்துவம்/சமத்துவம் பற்றிய கொள்கையை 2000களின் பிற்பகுதியில் உருவாக்கினர். இருப்பினும், CARE நிறுவனத்தினால் (2015) இல் உருவாக்கப்பட்ட அறிக்கையின்படி இக் கொள்கைகள் எவையும் இதுவரை செயல்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

| கிடைக்கப்பெறும் ஆவணங்கள்/ பொறிமுறைகள் | கவனத்திற் கொள்ள வேண்டிய பகுதிகள் |
| --- | --- |
| தற்போதுள்ள கல்வி முறை குறித்து ஜனாதிபதி செயலணியின் ஆய்வு:<br><br>இணைத்த, சமமான மற்றும் பாரபட்சமற்ற கல்வியினை அதன் முக்கிய மதிப்புகளாகக் கொண்டுள்ளது.<br><br>இந்த மதிப்பாய்வு ஒட்டுமொத்த கல்வித் துறைக்கான சில பரிந்துரைகளை பரிந்துரைத்துள்ளது. பொதுத் துறைக்கான நடுத்தர கால (2020-2023) பரிந்துரைகளில் முக்கிய பாடங்களாக மனித உடற்கூறியல் மற்றும் பாலியல் கல்வி ஆகியவை அடங்குகின்றன. | முரணாக, குறிப்பிடப்பட்ட முக்கிய மதிப்புகளின் கீழ், மதம், சாதி, வர்க்கம், இனம், தேசியம், மாற்றுத்திறனாளிகள் போன்றவை பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், பலதரப்பட்ட பாலியல் நாட்டம், அல்லது பாலின அடையாளங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.<br><br>குழந்தை மருத்துவத்திற்கான அமெரிக்கக் கல்வி நிறுவனத்தின் கூற்றுப்படி, பாலியல் கல்வி என்பது மனித பாலியல் உடற்கூறியல், பாலியல் இனப்பெருக்கம் பற்றியது மட்டுமல்ல, பாலியல் நாட்டம், பாலின அடையாளம் போன்ற தலைப்புகளையும் உள்ளடக்கியது. நடுத்தர கால பரிந்துரையின் கீழ், இத்தகைய தலைப்புகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. |
| பொது சுகாதார பரிசோதகர்களுக்கான (PHI) கையேடு:<br><br>இந்த கையேட்டின் அத்தியாயம் 9இல், உள மற்றும் உடல் ரீதியான துஷ்பிரயோகம், குழந்தைகளுக்கு எதிரான கொடுமைப்படுத்துதல் மற்றும் அதிர்ச்சி என்பவற்றினைத் தடுப்பதற்கான சுகாதார மேம்பாட்டுக் கொள்கைகளை உருவாக்குவதற்கும் செயற்படுத்துவதற்கும் பாடசாலைகளுக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உதவ வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. | கொடுமைப்படுத்துதல் அல்லது துன்புறுத்தலுக்கான பல்வேறு காரணங்கள் இருக்கலாம். மேலும் பாலியல் நாட்டம், பாலியல் அடையாளம் மற்றும் அதன் வெளிப்பாடு போன்றவை இத்தகைய அடிப்படைகளில் ஒன்றாகும். இது குறிப்பிடப்படவில்லை.<br><br>உதாரணமாக, ஐக்கிய நாடுகளின் அமைப்பபின் ஆய்வில் ஐக்கிய அமெரிக்காவில் 70% LGBTIQ மாணவர்கள் பாடசாலையில் பாதுகாப்பின்மையினை உணர்ந்ததாகக் கண்டறிந்தது. மேலும் சீனாவில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் பதிலளித்த LGBTIQ இனரில் 59% ஆனோர் கொடுமைப்படுத்துதல் அவர்களின் கல்வித் திறனை எதிர்மறையாகப் பாதித்ததாகக் கண்டறிந்துள்ளனர்.<br><br>சகாக்களினால் ஏற்படும் அழுத்தம் மற்றும் துன்புறுத்தல் (2012) பற்றிய ஆய்வில், இலங்கையில் 13-16 வயதுக்குட்பட்ட 68% பாடசாலைச் சிறுவர்களும், 51.2% பாடசாலை மாணவிகளும் கொடுமைப்படுத்துதலுக்கு ஆளாகியுள்ளனர். அவர்களில் 23% ஆனோர் அவமானத்திற்கு உள்ளாகியுள்ளனர் (புனைப்பெயர் கூறி அழைத்தல் போன்றவை). இதன் விளைவாகப், பாடசாலைகள் 23% ஆனோர் பாடசாலைக்குச் சமூகமளிக்காமையினை எதிர்நோக்கியுள்ளது. |
| 7ஆம் வகுப்புக்கான உடல்நலம் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் வழிகாட்டி (2016):<br><br>7ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஆரோக்கியமான நடத்தை பற்றி கற்பிக்க ஆசிரியர்கள் வழிகாட்டப்படுகிறார்கள், இதில் எதிர் பாலினத்தவர் மீதான உணர்வுகள்/ஈர்ப்பு என்பன மாத்திரமே அடங்குகின்றன. | பாடத்திட்டமானது எதிர் பாலினத்தவர் மீதான உணர்வுகள், திருமணம், எதிர்ப்பாலின ஈர்ப்புடைய பெற்றோர்களை மட்டுமே கொண்ட குடும்பம் போன்றவற்றைப் பற்றி பேசுவதால் சந்தேகத்திற்கு இடமின்றி எதிர்ப்பால் நெறிமுறைகளை கொண்டதாய் இருக்கின்றது. இது தன்பாலீர்ப்பினருடனான உணர்வுகள் அசாதாரணமான அல்லது ஆரோக்கியமற்ற நடைமுறை என்பதைக் குறிக்கிறது. இத்தகைய கற்பித்தல் நடைமுறைகளால் மாணவர்களுக்கு பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் பற்றிய சரியான தகவல்கள் கிடைப்பதில்லை. பல்வேறு பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகளைக் கொண்ட மக்கள் மீதான பாகுபாடு மற்றும் ஓரங்கட்டுதல் என்பன சிறு வயதிலிருந்தே மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது என்பதுடன் வேரூன்றியுள்ளது. |

| | |
|---|---|
| 8 ஆம் வகுப்புக்கான சுகாதாரம் மற்றும் கல்விசார் ஆசிரியர் வழிகாட்டி (2017):<br><br>ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல்களின் கீழ், உள-சமூகத் திறன்களில் ஒன்றாக அனுதாபம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் அனுதாபத்தின் கீழ், "பலவீனங்கள் உள்ளவர்களைக் கொடுமைப்படுத்துவதைத் தவிர்க்கவும்'' எனக் குறிப்பிடப்படுகிறது. | "பலவீனங்கள் கொண்ட நபர்கள்'' என்ற சொல் வரையறுக்கப்படவில்லை. இவ் உணரப்பட்ட பலவீனங்கள் எவை என்பதனை இவ் ஆவணம் குறிப்பிடவில்லை. கொடுமைப்படுத்துதல் என்பது "பலவீனங்கள்" காரணமாக மட்டுமல்லாது, வயது, மதம்/இனம், செல்வம் மற்றும் சமூகப் பொருளாதார நிலை, ஆர்வங்கள் மற்றும் பொழுதுபோக்குகள், பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் உணரப்பட்ட வேறுபாடுகள் மற்றும் "அந்நியப்படுத்துதல்'' காரணமாக ஏற்படுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இக் காரணிகளில் பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் முக்கியமான ஒன்றாகும், ஆனால் இவை விவாதிக்கப்படவோ குறிப்பிடப்படவோ இல்லை. |
| 10ஆம் வகுப்புக்கான சுகாதாரம் மற்றும் உடற்கல்விக்கான ஆசிரியர் வழிகாட்டியின் (2015) கீழ்:<br><br>தன்பாலீர்ப்பின உறவு சார்ந்த உணர்வுகள்/ செயல்கள் பாலியல் துன்புறுத்தல்கள் அல்லது துஷ்பிரயோகம் என குறிப்பிடப்பட்டுள்ளது. | பலதரப்பட்ட பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் பற்றிய சரியான தகவல்களைப் பரப்புவதற்குப் பதிலாக, இது ஒரு களங்கம் என முத்திரையிடப்பட்டுள்ளது. ஈக்வல் க்ரௌண்ட் இனது பற்றிய விவரணையாக்க ஆய்வில், ஆய்வின் பல LGBTIQ பதிலளிப்பவர்கள் பாடசாலைகள் ஆதரவானதொரு கற்றல் சூழலை விட அடக்குமுறையான சூழலினையே கொண்டுள்ளன என்பதனை விவரிப்பதன் மூலம் தெரியவருகிறது. இம் மேற்கோள் காட்டப்பட்ட ஆசிரியர்களின் வழிகாட்டி, மாணவர்களின் கல்வி மற்றும் பள்ளி அனுபவத்தின் இத்தகைய முக்கியமான மற்றும் கவலையளிக்கும் ஆய்வுக் கண்டுபிடிப்புக்குப்பின் பின்னணியின் அடிப்படை ஆசிரியர்கள் என்கின்ற காரணத்தினை விளக்குகிறது. LGBTIQ நபர்கள் மற்றும் பலதரப்பட்ட பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகளைப் பற்றிய தவறான தகவல்களை அவர்களுக்குக் கற்பிப்பதன் மூலம், இது தவிர்க்கப்படாமல் மாணவர்களிடம் சென்றடைந்துவிடும். |
| பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) தொடர்பான தேசிய செயல் திட்டம் (2016-2020):<br><br>கல்வித் துறையின் கீழ் உள்ள முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாக பால்நிலை மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றி ஊடாடுதல் சார்ந்த பயிற்சித் தொகுதிகளை உருவாக்குவது மற்றும் வழக்கமான பயிற்சித் திட்டங்கள்/ஆலோசனை வழிகாட்டுதல் பயிற்சி/ பாடசாலையினை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் பயிற்சி/ முன் சேவை ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றில் இவற்றை இணைத்தல் ஆகும். | இலங்கையின் நான்கு மாவட்டங்களில் "பாலினத்தினை விரிவுபடுத்துதல்: ஆண்மை ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது - அணுகுமுறைகள், நடைமுறைகள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை'' ஆகிய தலைப்புகளில், கெயார் இன்டர்நஷனல் (2013) இல் நடாத்திய ஆய்வின், அடிப்படையில் ஒரு ஆணினால் 4% ஆண்கள் தன்பாலீர்ப்பின உறவு வன்முறையை அனுபவிப்பதாகவும் மேலும் 4% பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.<br><br>பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை என்பது ஒருவரின் பாலின அல்லது பாலுணர்வின் அடிப்படையில் அவரது பொது அல்லது தனிப்பட்ட வாழ்வில் நிகழும், உடல், மன, அல்லது பாலியல் தீங்கு அல்லது துன்பம், அத்தகைய செயல்களின் ஊடான அச்சுறுத்தல்கள், வற்புறுத்தல்கள் மற்றும் ஏனைய சுதந்திரத்தை பறிக்கும் செயல்கள் என்பவற்றினைக் குறிக்கிறது. (ஐ.நா. பெண்களுக்கு எதிரான வன்முறையினை இல்லாதொழிப்பதற்கான பிரகடனத்தின் அடிப்படையில் 1993). |

| | |
|---|---|
| | பாலுணர்வு பலதரப்பட்டதாக இருக்கலாம், மேலும் அது பலதரப்பட்ட பாலியல் நாட்டம், பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடுகளை உள்ளடக்கியது எனப் பொருள்படும். எனவே பாலியல் மற்றும் பாலின அடிப்படையில் LGBT நபர்கள் எதிர்நோக்கும் சம்பவங்களும் இவற்றுள் அடங்கும், ஆனால் அவை தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. |
| பகிடிவதைச் சட்டம்:<br><br>இச் சட்டம் பகிடிவதைக்கு எதிரான தண்டனையை வழங்குகிறது. | பகிடிவதை என்கின்ற வரையறையில் பாலியல் நாட்டம் அல்லது தன்பாலீர்ப்பின உறவு மீதான அச்சம் தாக்குதல்கள்/குற்றம்சாட்டுதல் போன்றவை குறிப்பிடப்படவில்லை.<br>அதனால்தான், Counterpoint (2018) இன் கட்டுரையின் படி, பகிடிவதைச் சட்டம் காணப்பட்ட போதிலும், தன்பாலீர்ப்பின உறவு வன்முறை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அனுபவிக்கும் துன்புறுத்தல் நடவடிக்கைகள் என்பன தொடர்பில் முறையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன, ஆனால் அவை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புகார் முறைமை:<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2017இல் நிகழலை ஊடான புகார்களை மேற்கொள்ளக்கூடியதொரு முறையினையும் அதேபோல் பாதுகாப்பான தொலைபேசியினையும் அறிமுகப்படுத்தியது. எந்தவொரு வடிவத்திலுமான எத்தகையதொரு தொந்தரவு அல்லது அச்சுறுத்தினை எதிர்கொள்ளுபவர்கள் இங்கு உதவி பெற முடியும். | பகிடிவதைகள் மற்றும் துன்புறுத்தலின் சம்பவங்களுக்கு முகம் கொடுப்பவர்களுக்குப் பதிலளிக்கும் நபர்கள் கல்வி அமைப்பில் எதிர்நோக்கப்படும் பல்வேறு கொடுமைப்படுத்துதல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் சார்ந்த சம்பவங்களைக் கையாளத் தேவையான உணர்திறன் பயிற்சிகளைப் பெற்றிருக்கிறார்களா என்பது தெளிவாக இல்லை.<br><br>மேலும், LGBTIQ தனிநபர்கள் மற்றும் அவர்கள் கல்வி அமைப்புகளில் எதிர்கொள்ளும் துன்புறுத்தல் கொடுமைப்படுத்துதல் தொடர்பில் தற்போது கைவசமுள்ள எந்தவொரு உள்ளூர் வழிமுறைகளிலும் வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை. |
| உள-சமூக ஆதரவு மற்றும் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவு:<br><br>பாடசாலையில் வழிகாட்டுதல் ஆலோசனை தொடர்பிலான பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்குப் பொறுப்பான இந்த பிரிவு (உதாரணமாக: இணைப் பாடநெறி நடவடிக்கைகள், வழிகாட்டல் மற்றும் ஆலோசனை மற்றும் சமாதான கல்வி என்பவற்றின் கீழ்) ஒரு கிளையின் கிளையாக இயங்கும். | இவ்வாறான முற்போக்கான முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், இலங்கையில் பாடசாலைகளில் காணப்படும் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்பிலான குறிப்பிட்ட பல பிரச்சினைகள் இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றத்திற்குக் காரணமாகிறது. அவற்றில் மிக ஆழமான பிரச்சினையாக காணப்படுவது, பாடசாலைகளில் ஆலோசகர்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தல். உதாரணமாக, கல்வி அமைச்சின் (2012) அறிக்கையின்படி இலங்கை அரச பாடசாலைகளில் பணியாற்றுகின்ற 1,086 வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கான ஆசிரியர்கள் 4,004,086 மாணவர்களுக்கு உளவியல் சேவைகளை வழங்கியுள்ளனர் ஆலோசகர்கள் மாணவர்களின் விகிதமானது<br>1:3,687 ஆகக் காணப்பட்டது.<br>மேலும், இவ் ஆலோசகர்கள் பாலியல் நாட்டம், பாலினம் அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் தொடர்பான பிரச்சினைகள் மீது உணர்திறன் கொண்டவர்களாகவும் நன்கு பயிற்சி பெற்றவர்களாகவும் காணப்படவில்லை. இதன் காரணமாக மாணவர்கள் தங்கள் பிரச்சினைகளை அணுகுவதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். |

# வேலைவாய்ப்பு

பாலியல் நாட்டம் மற்றும் பாலின அடையாளத்தை முன்னிலைப்படுத்தி, நிறுவப்பட்ட பிளவுபட்ட வடிவங்களுக்கு இணங்காத ஒரு நபர் பணியிடத்தில் பாகுபாடுகளால் பாதிக்கப்படலாம். LGBTIQ மக்கள் எதிர்கொள்ளும் வேலைவாய்ப்பு பாகுபாடு அடிப்படை சவாலை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2030ஆம் ஆண்டுக்கான நிலையான அபிவிருத்தி இலக்கிற்கான நிகழ்ச்சி நிரலான “எந்த நபரும் பின்தங்கிய நிலையில் இல்லை” இனை அடைவதற்கான சவாலாக அமைகிறது. இந்த ஒளியில், பாலியல் சமத்துவம் (SDG 5), ஒழுக்கமான வேலை (SDG 8) மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் (SDG 10) உட்பட பல நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் ஒரு முக்கிய நடவடிக்கை ஆகும்.

பணியிடத்தில் உள்ள பாகுபாடு (2021) தொடர்பில் ஈக்வல் க்ரௌண்ட் மற்றொரு ஆய்வினை (2021) இல் மேற்கொண்டு பின்வருவனவற்றினைக் கண்டறிந்தது. பதிலளித்தவர்களில் அரைவாசியினர் (42%) அவர்கள் பணியிடத்தில் தங்கள் பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தவில்லை. பதிலளித்தவர்களில் அரைவாசியினர் (50%) பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தினால், அவர்களுக்கு களங்கம் மற்றும் பாகுபாட்டை எதிர்நோக்கக் கூடும் என நம்பினர். இது LGBTIQ ஊழியர்கள் தங்களது பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் என்பவற்றினை வெளிப்படுத்தல் மற்றும் பணியிடத்தில் தாங்கள் தாமாகவே இருத்தல் ஆகிவற்றிற்கான போராட்டத்தினைக் குறிக்கிறது.

இந்த ஆய்வின் மற்றொரு முக்கியமான வெளிப்பாடாக 58% மாணவர்கள் வாய்மொழி மூலமான தொந்தரவினை அனுபவிப்பதாகக் கூறினர். மற்றும் 31% மாணவர்கள் பாலியல் துன்புறுத்தல்களை அனுபவிப்பதாகக் கூறினர். அத்தகைய சம்பவங்களைப் பற்றி நிர்வாகத்திற்கு புகார் செய்ய முடியுமா எனக் கேட்டபோது, 44% மாணவர்கள் புகார் செய்தால் மேலும் பழிவாங்கல்களை எதிர்கொள்ள நேரிடும் என அச்சம் கொள்வதாக தெரிவித்தார்கள். இது LGBTIQ ஊழியர்கள் தங்கள் பணியிடத்தில் வாய்மொழி மற்றும் / பாலியல் துன்புறுத்தல்களை அனுபவித்தாலும் கூட, அதிகரித்த பாகுபாடு மற்றும் / களங்கம் ஆகியவற்றை எதிர்கொள்ள நேரிடும் என்கின்ற பயத்தினால் அவர்கள் மௌனமாக இருக்க முனைகிறார்கள்.

| கிடைக்கப்பெறும் ஆவணங்கள்/ பொறிமுறைகள் | கவனத்திற் கொள்ள வேண்டிய பகுதிகள் |
|---|---|
| <u>அரசியலமைப்பின் பிரிவு 12:</u><br><br>அனைத்து நபர்களினதும் சட்டத்தின் முன்னரான சமமான உரிமை, மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு என்பவற்றிற்கான உத்தரவாதமளிப்பதுடன், இது இனம், மதம், மொழி, சாதி, பாலியல், அரசியல் கருத்து மற்றும் பிறப்பு ஆகியவற்றின் அடிப்படை பாகுபாட்டைத் தடை செய்கிறது. | இருப்பினும், பாலியல் நாட்டம் மற்றும் பாலின அடையாளம் ஆகியன தொடர்பில் குறிப்பிடவில்லை. ஆகையால், அரசியலமைப்பு பாலியல் நாட்டம் அல்லது பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாட்டினைத் தடை செய்யவில்லை. |
| <u>சர்வதேச தொழிலாளர் அமையம் (ஊ111) பாகுபாடு (வேலைவாய்ப்பு மற்றும் தொழில்) மாநாடு, 1958:</u><br><br>இவ் உடன்படிக்கையை இலங்கை ஏற்கனவே அங்கீகரித்துள்ளது. உடன்படிக்கை எண். 111, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலில் சமவாய்ப்பு மற்றும் சமமாக நடாத்தப்படுதல் என்பவற்றினை மேம்படுத்துவதற்கான தேசியக் கொள்கையை “அறிவிக்கவும் தொடரவும்” அரசுகளை ஊக்குவிக்கிறது. | இதில் முரண்பாடு என்னவென்றால், LGBTIQ ஊழியர்களுக்கான வேலைவாய்ப்பு தொடர்பான விஷயங்களில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுப்பது தொடர்பில் அரசியலமைப்புச் சட்டம் அல்லது தொழிலாளர் சட்டத்தில் எவ்விதக் கொள்கை அல்லது சிறப்பு ஏற்பாடுகளும் இல்லை. |

| | |
|---|---|
| தேசிய மனித வளம் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை (ரேசுநீ):<br><br>பாதிக்கப்படக்கூடிய மற்றும் பின்தங்கிய குழுக்களுக்கான சிறப்புத் திட்டங்களைப் பற்றி பேசுகிறது.<br>தொழிலாளர் சக்தியின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கொள்கை பரிந்துரைகளின் கீழ், NHREP சமமான வேலைவாய்ப்பு உரிமைகள் மற்றும் களங்கம் மற்றும் பாகுபாடு இல்லாத சூழலை செயல்படுத்துகிறது. | இருப்பினும், இந்த வகையின் கீழ் யார் வருவார்கள் என்பதற்கான விவரக்குறிப்பு எதுவும் இல்லை. மேலும், பாலியல் சிறுபான்மை குழுக்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்தக் கொள்கைப் பரிந்துரையானது HIV/எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு மட்டுமே, அதேசமயம் பலதரப்பட்ட பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் உள்ளவர்களுக்கும் இது பொருந்தக்கூடியதாக அமைய வேண்டும். |
| டீசண்ட் வேர்க் கன்ட்ரி திட்டம் (Decent Work Country Programme ) (DWC):<br><br>சமீபத்திய DWCP இல், "2022 ஆம் ஆண்டளவில், இலங்கையில் உள்ள மக்கள் மேம்படுத்தப்பட்ட தரவு, அறிவு முகாமைத்துவத்தின் மூலம் ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும் உள்ளடக்கிய மற்றும் பதிலளிக்கத்தக்க தீர்மானங்களை மேற்கொள்வதை உறுதி செய்வதற்கும் ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கை அரசு என்பன உறுதியளித்துள்ளன." | 2022 ஆம் ஆண்டு வரை, LGBTIQ ஊழியர்களுக்கான பணியிட ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதில் உதவக்கூடிய எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. |
| Vision 2025:<br><br>நாட்டின் உள்ளடக்கிய மற்றும் சமமான வளர்ச்சிக்காக நிலையான அமைதி சமத்துவம் அனைவரின் மனித உரிமைகளையும், நமது சமூகத்தின் பன்முகத் தன்மையையும் நிலைநிறுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் என்பன தொடர்பில் பேசுகிறது. | உள்ளடக்கிய அபிவிருத்திக்காக, பெண்கள், இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்ற பல்வேறு குழுக்களை பணியாளர்களில் உள்வாங்குவதனைப் பரிந்துரைக்கிறது, ஆனால் LGBTIQ சமூகம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. |
| வேலைத்தளங்களில் பாலியல் துன்புறுத்தலைத் தடுப்பதற்கும் தீர்வு காண்பதற்கும் நடத்தை விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள்:<br><br>பாலியல் துன்புறுத்தல் என்பது ஒரு ஆண் பெண்ணை அல்லது மற்றொரு ஆணை துன்புறுத்துவதையும் அல்லது ஒரு பெண் மற்றொரு பெண்ணை அல்லது ஆணை துன்புறுத்துவதையும் உள்ளடக்கியதாக கூறுகிறது. பாலியல் துன்புறுத்தல்கள் பாலியல் மற்றும் பாலுணர்வின் அடிப்படையில் இருக்கலாம் என்றும் அது கூறுகிறது.<br>LGBTIQ ஊழியர்களை உள்ளடக்கிய ஒரு நபரின் பாலினம் மற்றும்/அல்லது பாலியல் அடையாளத்தை அவமதிப்பது வாய்மொழி துன்புறுத்தலாக பட்டியலிடப்பட்டுள்ளது. | இந்த நடத்தை விதிகள் LGBTIQ ஊழியர்களுக்கும் பொருந்தக்கூடிய பிரச்சினைகளை உள்ளடக்கியிருந்தாலும், LGBTIQ நபர்கள் மீது பணியிடத்தில் இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தலுக்கு எந்த ஏற்பாடு என்பது தொழிலாளர் சட்டங்களின் கீழ் இல்லை.<br>இலங்கையின் தண்டனைச் சட்டத்தில் மட்டுமே பாலியல் துன்புறுத்தல் (பிரிவு 345) தொடர்பில் காணப்படுகிறது. அதே தண்டனைச் சட்டத்தில் விதிகள் (பிரிவு 365 மற்றும் 365A) காணப்படுகின்றன. அவை இணக்கத்துடன் சம்மதித்த பெரியவர்களிடையே ஒரே பாலின உறவுகளை ஒப்புக்கொள்வதை குற்றமாக்குகின்றன, இது LGBTIQ நபர்கள் தமக்கு நேர்ந்த துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பில் புகாரளிக்கும் போது முரண்படுகிறது.<br>மறுபுறம், பொதுத் துறையைப் பொறுத்தவரை, இலஞ்ச ஒழிப்புச் சட்டம் பொது அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் பாலியல் துன்புறுத்தலுக்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது (பிரிவு 19). |
| தொழில் தகராறு சட்டம்:<br><br>இது பணியிடம் தொடர்பான தகராறுகளைக் கையாள்கிறது. இதில் பாலியல் துன்புறுத்தல்களும் அடங்கும். | இருப்பினும், பணியிடங்கள் தொடர்பான பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. |

# பிற நாட்டு உதாரணங்கள்

## கல்வி அமைப்பில்

2018இல், இலங்கையின் நெருங்கிய அண்டை நாடான இந்தியா பாலியல் கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. பாலியல் மற்றும் பாலுறவு பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்த இந்திய சுகாதார அமைச்சும் செயல்பட்டு வருகிறது. 2017இல், “தன்பாலீர்ப்பின உணர்வுகள்” இயற்கையானது என்று கூறியது. தன்பாலீர்ப்பின பெண்கள், தன்பாலீர்ப்பின ஆண்கள், ஈர்பாலீர்ப்பினர்கள், திருநர்கள், இடையிலிங்கத்தவர்கள், பால் புதுமையர்கள்/வினவினர் (LGBTIQ) நபர்கள் சார்ந்த பாரபட்சமான மற்றும் அறிவியலற்ற சித்திரிப்புகளைத் தவிர்ப்பதற்காக வெளியீட்டாளர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளிடம் அவர்களது பாடப்புத்தகங்கள் மற்றும் பாடத்திட்டங்களைத் திருத்துமாறு இந்தியாவின் தேசிய மருத்துவ ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மேலும், நமீபியாவில், வாழ்க்கைத் தேர்ச்சி பாடத்திட்டத்தில் பலதரப்பட்ட பாலுணர்வுகள் பற்றிய கற்றல் மற்றும் விவாதம் ஆகியவை அடங்குகின்றன.

மகாராஷ்டிரா அரசு அதன் 11ஆம் வகுப்பு சமூகவியல் பாடப்புத்தகத்தை (2019-20 கல்வியாண்டு) திருத்தியுள்ளது, இது இப்போது நாடு முழுவதும் காணப்படும் பல குடும்பங்களை பட்டியலிடுகிறது: ஒற்றை பெற்றோரினைக் கொண்ட குடும்பங்கள், இணைந்து வாழும் உறவுகள், ஒரே பாலின பெற்றோருடனான குடும்பங்கள் மற்றும் மாற்றாந்தாய் பெற்றோருடனான குடும்பங்கள், ஒரே பாலின திருமணங்கள், பாலின சமத்துவம் மற்றும் பல்வேறு கலாச்சார தாக்கங்களின் கலவை என்பன பற்றி இப் புத்தகம் பேசுகிறது.

2019ஆம் ஆண்டில், நெதர்லாந்து தூதரகத்தின் ஆதரவுடன், டெல்லி அரசின் கல்வி பணிப்பாளருடன் இணைந்து மக்கள் விழிப்புணர்வு பராமரிப்பு மற்றும் அதிகாரமளித்தல் (ஸ்பேஸ்) என்ற அரச சார்பற்ற நிறுவனத்தால் தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ், பாடசாலைகளில் பல்வேறு பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இத்திட்டத்தினது எட்டு மாதங்களுக்குப் பின்னர், 25 அரச பாடசாலைகள் உட்பட 27 பாடசாலைகள் “மாற்றுப்பால் நட்பு” சான்றிதழினைப் பெற்றுள்ளன.

பகிடிவதைச் சட்டம், இந்தியாவின் தொடர்புடைய கொள்கைகள் குறிப்பாக தன்பாலீர்ப்பின உறவு தாக்குதல்களை உள்ளடக்கியது.[1] பிலிப்பைன்ஸில், கொடுமைப்படுத்துதல் எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பாலியல் நாட்டம் மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் கொடுமைப்படுத்துதல் பற்றிய குறிப்புகளை உள்ளடக்கியது. கொலம்பியாவில், பொகோட்டா மாவட்டத்தின் கல்வித் துறை, உயர்தரப் பாடசாலைகளில் தன்பாலீர்ப்பின உறவு கொடுமைப்படுத்துதல் குறித்து ஒரு கணக்கெடுப்பை நடத்தியது. மால்டா பாகுபாடு-எதிர்ப்புக் கொள்கையை ஏற்றுக்கொண்டது. இது குறிப்பாக பாடசாலைகளில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் இடையிலிங்க மாணவர்களின் நிலைமையைக் குறிக்கிறது.

2014ஆம் ஆண்டில், நேபாளத்தின் கல்வி அமைச்சு 6, 7 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கான பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் குறித்த பாடசாலைப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக பாலியல் மற்றும் பால்நிலைப் பன்முகத்தன்மையை உள்ளடக்கியது.

## பணியிடம;/வேலைவாய்ப்பு துறை

அயர்லாந்தில், சமத்துவம் மற்றும் பன்முகத்தன்மை உத்திகள் பணியாளர்களின் கண்டுபிடிப்புகளில் 7.9% அதிகரிப்பையும், தொழிலாளர் உற்பத்தித்திறனில் 6.5% அதிகரிப்பையும் ஏற்படுத்தியது. அரசாங்கத்தின் தேசிய பணியிட மூலோபாயத்தை செயல்படுத்துவதில் பணியிட சமத்துவம் மற்றும் பன்முகத்தன்மையை மேம்படுத்துவது இப்போது முன்னுரிமை மையமாக வெளிப்படுகிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும் .

நேபாள அரசியலமைப்பின் பிரிவு 18(3) சமத்துவ உரிமையை உறுதி செய்வதற்காக பாலியல் சிறுபான்மையினரின் (பிற சிறுபான்மை குழுக்கள் உட்பட) உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சிறப்புச் சட்டத்தை உருவாக்கலாம் என்று விவரிக்கிறது.

1 இந்திய உச்ச நீதிமன்றம் 16.5.2007 திகதியன்று வழங்கிய உத்தரவின்படி, தொழில்நுட்ப நிறுவனங்களில் பகிடிவதையினைத் தடுப்பதற்கும் தடை செய்வதற்கும் விதிகள் மற்றும் விதிமுறைகளை கடுமையாக அமல்படுத்த உத்தரவிட்டது.

இணைத்துக்கொள்ளும் கலாசாரத்தை வலுப்படுத்தவும், LGBTQ+ பணியாளர்கள் பணியிடத்தில் சம உரிமைகளைப் பெறுவதற்கும் ஒரு படி மேலே சென்று, இந்தியாவில் உள்ள டாட்டா ஸ்டீல், LGBTQ+ சமூகத்தைச் சேர்ந்த சக பணியாளர்கள் தங்கள் துணை தொடர்பில் அறிவிக்கவும் அனைத்து மனித வளங்களையும் பெறவும் உதவும் புதிய மனிதவளக் கொள்கையை உருவாக்கியுள்ளது. சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நன்மைகள் விரிவாக்கப்பட்ட பன்முகத்தன்மை மற்றும் இணைத்துக் கொள்ளல் (D&I) சார்ந்த கொள்கையின் கீழ், டாட்டா ஸ்டீல் ஊழியர்களும் அவர்களது துணையும் உடல்நலப் பரிசோதனை, மருத்துவப் பலன்கள், கூட்டாக வசிப்பதற்கான இல்லம், தத்தெடுப்பு விடுமுறை, புதிதாக குழந்தை பிறந்த பெற்றோருக்கான விடுமுறை, குழந்தை பராமரிப்பு விடுமுறை உள்ளிட்ட பல நன்மைகளைப் பெற முடியும். மற்றும் பணியாளர் உதவித் திட்டத்தில் (EAP) இணைத்தல், பணியாளர்களுக்கு பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைக்கு நிதி உதவியும், அதற்காக 30 நாட்கள் சிறப்பு விடுமுறையும் வழங்கப்படும்.

## முன்னோக்கிய பாதை

கொள்கைகள், பரிந்துரைகள் மற்றும் தலையீடுகளை கோடிட்டுக் காட்டும் பல்வேறு ஆவணங்களை மதிப்பாய்வு செய்வதன் மூலம், பாலியல் நாட்டம் மற்றும் பாலின அடையாளங்கள் விவாதிக்கப்படுவதில்லை, ஒரு நபரின் வாழ்க்கையில் முக்கிய காரணிகளாக அங்கீகரிக்கப்படவில்லை, தீவிரமாக அழிக்கப்பட்டுள்ளன, அல்லது மிக முக்கியமாக, “களங்கம்” அல்லது “நீக்கம்” எனக் கருதப்படுகின்றது. இவற்றிற்கு ஏராளமான சான்றுகள் மற்றும் ஆராய்ச்சிகள் இருந்தபோதிலும், இவ் ஆவணங்கள் எதுவும் இலங்கையில் பலதரப்பட்ட பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் இருப்பதை ஒப்புக்கொள்ளவில்லை.

புறக்கணிக்கப்பட்டவர்களை சேர்ப்பது ஒரு சிக்கலான சவாலாகும். இது தொடர்ச்சியான மற்றும் உள்ளடக்கிய முயற்சிகளால் அடைய முடியும். கல்வி மற்றும் வேலைத் துறைகளில் LGBTIQ மக்களின் பாகுபாட்டை நிவர்த்தி செய்வதற்கும் தணிப்பதற்கும் இலங்கை சில நேர்மறையான மற்றும் உள்ளடக்கிய கொள்கை மாற்றங்களைச் செய்யலாம். இது நீண்டகாலத்தில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கும். பல்வேறு அரசாங்கக் கொள்கைகள், உள்ளடக்கிய தன்மை மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியைப் பற்றி பேசுகின்றன, ஆனால் LGBTIQ மக்களை அனைத்துத் துறைகளிலும் சேர்க்காமல் அத்தகைய உள்ளடக்கிய வளர்ச்சியை அடைய முடியாது.

<u>நாட்டில் நேர்மறையான எடுத்துக்காட்டுகள்</u>

இலங்கை வயம்பப் பல்கலைக்கழகத்தின் பகிடிவதை, கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல் மற்றும் பாகுபாடு தடுப்புக் கொள்கை 2018, பாகுபாட்டின் அடிப்படைகளில் ஒன்றாக பாலியல் நாட்டத்தினை உள்ளடக்கியது. அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இந்த விடயத்தினை தெளிவாக உள்ளடக்கிய கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணைக்குழு (2019) உருவாக்கிய ‘குழந்தை பராமரிப்புக்கான பொதுக் குழந்தைப் பராமரிப்புப் பாடநெறி குறித்த பயிற்சியாளர் வழிகாட்டி’ இளம் பருவத்தினருக்கு வளர்ந்து வரும் பாலுணர்வின் பன்முகத்தன்மையை (பாலியல் மற்றும் பாலியல் நாட்டம் மேம்பாடு) கற்பிக்க வலியுறுத்துகிறது. வளர்ந்து வரும் பாலியல் மற்றும் பாலின நாட்டம் பற்றிய வேறுபாடுகளை விளக்குவதற்கு 'Genderbread Person' ஐப் பயன்படுத்தவும் அது பரிந்துரைத்தது

குறிப்பிடப்பட்ட கொள்கைகள், ஆவணங்கள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதை குறித்து, அண்டை நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்முயற்சிகளைக் கருத்தில் கொண்டு, இந்தக் கொள்கைச் சுருக்கம் பின்வரும் பரிந்துரைகளை பரிந்துரைக்கிறது:

பாடசாலைப் பாடத்திட்டத்திலிருந்து பாரபட்சமான வழிகாட்டுதல்கள் மற்றும்/அல்லது தகவல்களை மாற்றுதல்

கல்வி தொடர்பான பல்வேறு தேசிய ஆவணங்களை மதிப்பாய்வு செய்த பின்னர், இவ் ஆவணங்கள்/ வழிகாட்டிகளில் மேலும் பாரபட்சமான தகவல்கள் இருப்பதைக் கண்டறிந்தோம். பாலியல் கல்வியில் பலதரப்பட்ட பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள், பாலுணர்வு போன்ற சிக்கல்கள் குறிப்பிடப்படவில்லை. இந்த ஆவணங்கள் இயற்கையில் பன்முகத்தன்மை கொண்டவை மற்றும் ஒரே பாலின உணர்வுகளை ஆரோக்கியமற்ற நடைமுறை மற்றும் களங்கம் என முத்திரை குத்தியுள்ளன. இந்த விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் திருத்தப்பட வேண்டும் மேலும் சேர்த்துக்கொள்ளுதலாக இருக்க வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் கொடுமைப்படுத்துதல் எதிர்ப்பு மற்றும்/அல்லது பூஜ்ஜிய பாகுபாடு கொள்கைகளை செயல்படுத்துதல்

2016ஆம் ஆண்டில், இலங்கையின் உச்ச நீதிமன்றம், HIV உடன் வாழும் அல்லது பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான முழு உரிமை உள்ளது மற்றும் பாகுபாடு காட்ட முடியாது என்று தீர்ப்பளித்தது. இருப்பினும், யுனெஸ்கோ (2017) அறிக்கையின்படி, ஒருவரின் HIV நிலையைத் தவிர, ஒரு குழந்தையின் தோற்றத்தின் பாரம்பரிய தரநிலைகளிலிருந்து (அதாவது சராசரி உயரத்தை விடக் குறைவாக இருப்பது, சராசரி எடையை விடக் குறைவாக இருப்பது அல்லது கண்ணாடி அணிவது), பன்முகத் தரநிலைகளுக்கு (தரநிலைகள்) கூறவில்லை. இது பாலின உறவுமுறை அல்லது இயல்புநிலை பாலியல் நாட்டம் என்பதை பிரதிபலிக்கிறது) இவை அனைத்தும் கொடுமைப்படுத்துதல் பழிவாங்கப்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் காரணிகளாகும். எனவே, கொடுமைப்படுத்துதல் எதிர்ப்பு மற்றும் ஒருவரின் பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் அடிப்படையில் பாகுபாடு காட்டுவது தொடர்பான பள்ளிக் கொள்கைகள் நடைமுறையில் இருப்பது முக்கியம். எடுத்துக்காட்டாக: கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் கல்லூரியில் (ஒரு சர்வதேச பள்ளி) அவர்களின் கொடுமைப்படுத்துதல் எதிர்ப்பு பள்ளிக் கொள்கையில் ஒரு தனிநபர் அல்லது குழு மீதான பாலியல், தன்பாலீர்ப்பின உறவு அல்லது இனவெறி மொழியை உள்ளடக்கியுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துல்

பாலியல் கல்வி, பாலியல், பலதரப்பட்ட பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் போன்ற பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க ஆசிரியர்கள் தயங்குவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. ஆசிரியர்கள் துல்லியமான தகவலைப் பரப்புவதற்கு இந்தப் பிரச்சினைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் மனநல ஆலோசகர்களின் மதிப்பீடு

பள்ளி அளவிலான மனநல ஆலோசகர்கள் பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் சார்ந்த சிக்கல்களைப் பற்றி அறிந்திருக்கிறார்களா மற்றும் உணர்திறனுடன் உள்ளார்களா என்பதை அடையாளம் காண அவர்களுக்கு முறையான மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். இல்லையெனில், தங்கள் பாலுணர்வோடு போராடும் அல்லது அது தொடர்பான கேள்விகளைக் கொண்ட மாணவர்கள் அவர்களுக்குத் தேவையான உதவியை ஒருபோதும் பெற மாட்டார்கள்.

ஆய்வு

இலங்கையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான மாநாட்டின் இறுதி அவதானிப்புகளின்படி (2010), கட்டாய ஒன்பது ஆண்டு சுழற்சியை முடிப்பதற்குள் ஐந்தில் ஒரு குழந்தை பள்ளியை விட்டு வெளியேறுகிறது. மேலும் அதிக அளவிலான பணிக்கு வராமல் இருப்பதும், திரும்பத் திரும்ப வருவதும் தொடர்கிறது. கல்வி அமைச்சு (MOE) மற்றும் தேசிய கல்வி நிறுவகம் (NIE) ஆகியவற்றால் பாடசாலை இடைவிலகல்களின் அடிப்படைக் காரணங்கள் பற்றிய கூடுதல் ஆராய்வுப் பணிகள் நடத்தப்பட வேண்டும், இது கொடுமைப்படுத்துதல் மற்றும் துன்புறுத்தல் காரணமாக உள்ளதா என்பதைக் கண்டறிய அளவு ரீதியான தரவு/ஆதாரங்களைப் பெற உதவும். பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் இடைவிலகல்களின் பின்னணியில் பங்கு வகித்தது.

## பகிடிவதைச் சட்டத்தில் பகிடிவதை பற்றிய ஒரு குறிப்பிட்ட மற்றும் உள்ளடக்கிய வரையறையை வழங்குதல்

பகிடிவதை என்ற போர்வையில் தாக்குதல் மற்றும் பாலியல் துன்புறுத்தல்களும் நடக்கலாம். எனவே, பகிடிவதைச் சட்டமானது பகிடிவதை பற்றிய வரையறையை உள்ளடக்கியிருக்க வேண்டும். இது செயல்களைக் குறிப்பிடும் (இது பகிடிவதை என்று கணக்கிடப்படும்). மேலும் இது ஒருவரின் பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள் காரணமாக துன்புறுத்துதல் / கொடுமைப்படுத்துதல் ஆகியவற்றை பற்றிய விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

## கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலைத்தளங்களிற்கான பன்முகத்தன்மை மற்றும் இணைத்தல் (Diversity and Inclusion (D&I)) பயிற்சிகள்

பொது மற்றும் தனியார் கல்வி மற்றும் வேலைவாய்ப்புத் துறைகள் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்குள்ளும் பன்முகத்தன்மை மற்றும் இணைத்தல் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். இது பல்வேறு பாலியல் நாட்டம், பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகள், பாலுணர்வின் பல்வேறு அம்சங்கள், இணைத்தலின் முக்கியத்துவம், பன்முகத்தன்மை போன்றவற்றைப் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறது. இத்தகைய பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் சார்ந்த பயிற்சிகள் மூலம் சங்கடமான தலைப்புகளில் குறித்துப் பேச உதவுகின்றன மற்றும் பாதுகாப்பான கற்றல் மற்றும் பணியிடத்தை உருவாக்குதல்.

## வேலைத்தளத்தில், இணைத்தல் தொடர்பான கொள்கைகளை மதிப்பாய்வு செய்து திருத்துதல்

ஈக்வல் க்ரௌண்ட் இன் பணியிட பாகுபாடு குறித்த ஆராய்ச்சி ஆய்வில், நேர்காணல் செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களில் 56% பேர் LGBTIQ ஊழியர்களுக்கு உள்ளடங்கிய பணியிட கொள்கை எதுவும் இல்லை என்றும் மற்றொரு 53% பேர் பாலினம் தொடர்பான கொள்கை எதுவும் இல்லை என்றும் கூறியுள்ளனர். எனவே, தற்போதுள்ள கொள்கைகளை மதிப்பாய்வு செய்து, LGBTIQ ஊழியர்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் அவற்றை உள்ளடக்கியதாக மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது.

## C190 இனை அங்கீகரித்தல்

வன்முறை மற்றும் துன்புறுத்தல் உடன்படிக்கை, 2019 (எண். 190) என்பது வேலை உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதை நோக்கமாகக் கொண்ட முதல் சர்வதேச தரமாகும். வன்முறை மற்றும் துன்புறுத்தல் இல்லாத வேலை உலகினை அனுபவிக்க அனைவருக்கும் உரிமை உண்டு என்பதை அது அங்கீகரிக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, இரண்டு நாடுகளால் மட்டுமே இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இலங்கை அதை அங்கீகரிக்கவில்லை. அரசாங்கம் ஒப்பந்தத்தினை அங்கீகரித்தால், பரவலான பிரச்சினையை எதிர்த்துப் போராடுவதற்கு பணியிட பாலியல் துன்புறுத்தலைத் தடுக்கும் சட்டங்களை இயற்றுவதற்கு அது உதவுகிறது.

## தொழிலாளர் சட்டத்தில் பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விதிகளைச் உள்வாங்குதல்

தற்போதுள்ள சட்ட நடைமுறையின்படி, இப்போது பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானவர்கள் குற்றவியல் சட்ட நடைமுறைக்கு செல்ல வேண்டும், ஏனெனில் தண்டனைச் சட்டத்தில் மட்டுமே பாலியல் துன்புறுத்தலுக்கான வெளிப்படையான விதிகள் உள்ளன. தொழிலாளர் சட்டத்தின் கீழ் உள்ள சிக்கல்கள் தொழிலாளர் நியாய சபைகளால் தீர்க்கப்படுகின்றன. இது பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நடைமுறைகளை ஒப்பீட்டளவில் எளிதாக்குகிறது. எனவே, தொழிலாளர் சட்டத்தில் வேலைத்தளங்களில் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் பிரச்சினையை இணைத்துக் கொள்ள வேண்டிய நேரமாக இது காணப்படுகின்றது.

## Works Cited


Anti-Bullying school policy, The British School in Colombo, https://www.britishschool.lk/userfiles/bscmvc/BSC%20002%20Anti-Bullying%20Policy.pdf

Brown, K (2017), Mapping LGBT in Colombo, Kandy and Nuwara Eliya, EQUAL GROUND, https://www.equal-ground.org/wp-content/uploads/Mapping-LGBT-in-Colombo-Kandy-Matara-and-Nuwara-Eliya.pdf

Dissanayake D, Weeratunge W, Gaspe G, Gamage A. Peer pressure and bullying among school going adolescents in the district of Kandy. J Coll Community Physicians Sri Lanka 2012. file:///C:/Users/HP/Downloads/4929-17514-1-PB.pdf

CARE (2013), Broadening gender: Why masculinities matter – attitudes, practices and gender-based violence, https://www.ugc.ac.lk/downloads/publications/SGVB.pdf

Counterpoint. (2018). Preventing Sexual and Gender Based Violence at Universities, available at: http://counterpoint.lk/preventing-sexual-and-gender-based-violence-atuniversities/

Chowdhury, S.A. (2021), A study on workplace discrimination: Challenges faced by LGBTIQ employees and the perspectives of employers in Sri Lanka, EQUAL GROUND, Sri Lanka.

Code of Conduct and Guidelines to Prevent and Address Sexual Harassment in Workplaces, https://www.ilo.org/wcmsp5/groups/public/---asia/---ro-bangkok/---ilo-colombo/documents/publication/wcms_525537.pdf

Concluding Observations of Convention on the Child Rights, Sri Lanka (2010), http://34.196.27.239/storage/app/media/concluding-observation-34.pdf

Decent work Country Programme, Sri Lanka (2018-2022), wcms_632743.pdf (ilo.org)

(EQUAL GROUND (2021), Mapping LGBTIQ Identities in Sri Lanka, https://www.equal-ground.org/wp-content/uploads/Report_EG-edited.pdf

Gunasekara SD, Young SM, Guruge GND (2021). Identifying Determinants of Bullying and Deciding on Measures through Engaging Adolescents in a Rural School in Sri Lanka. Asian Pac. J. Health Sci., 2021;8(1):69-75.

Health and Physical Education Teachers' Guide (2016) for Grade 7, https://nie.lk/pdffiles/tg/e7tim155.pdf

Health and Physical Education Teachers' Guide (2016) for Grade 8, http://www.nie.lk/pdffiles/tg/Health_TG_Gr_8_English_new.pdf

Health and Physical Education Teachers' Guide (2016) for Grade 10, https://nie.lk/pdffiles/tg/e10tim116.pdf

Huizhong (2017), India busts taboo with new Sex Ed Manual, https://edition.cnn.com/2017/02/23/asia/india-sex-education/index.html

Maharashtra sociology textbook includes single-parent, same-sex families, https://www.hindustantimes.com/india-news/maharashtra-sociology-textbook-includes-single-parent-same-sex-families/story-Thx65uxahpMTl4crKsJgKI.html

National Child Protection Authority (2019), 'Trainers Guide on General Child Care Course for Careers in Child Care Giving', https://www.childprotection.gov.lk/images/pdfs/acts-guidelines/2019%20%20Trainers%20Guide%20(%20General%20Child%20Care%20Course%20_%20NVQ%20Level%204)%20-%20English.pdf

National Centre for Partnership & Performance (NCPP) and the Equality Authority: New models of high-

performance work systems. The business case for strategic HRM, partnership and diversity and equality systems (Dublin, 2008).

National Human Resources and Employment Policy (NHREP), https://www.ilo.org/wcmsp5/groups/public/---asia/---ro-bangkok/---ilo colombo/documents/genericdocument/wcms_632743.pdf

Pathirana, D (2016), International Journal of Advanced Research (2016), Volume 4, Issue 6, 30-Preventing Sexual and Gender-Based Violence (SGBV), Strategies for Universities (2015), CARE International, Sri Lanka, https://www.ugc.ac.lk/downloads/publications/SGVB.pdf

Public Health Inspector (PHI) Manual, https://medicine.kln.ac.lk/depts/publichealth/Fixed_Learning/PHI%20manual/PHI%20New%20Documents%20Including%20full%20PHI%20Manual%20$%20Office%20Documents/PHI%20Manual%20Full/11%20Chapter%209%20-%20SCHOOL%20HEALTH%20PROGRAMME%20-(285-294).pdf

Ragging, Bullying, Harassment and Discrimination Prevention Policy 2018 of Wayamba University of Sri Lanka, https://eugc.ac.lk/cgee/downloads/policies/WUSL-Prevention-of-Ragging.pdf

Re-imagining Education in Sri Lanka (2020), Presidential Task Force on Sri Lanka's Education Affairs, Summary Report.

Rules and Regulations for Preventing and Prohibition of Ragging, India, http://nitm.ac.in/uploads/33575b4f0170d73f80586a96fff94332.pdf

Sexual and Gender Based Violence (SGBV) National Action Plan (2016-2020), http://gbvforum.lk/r-library/document/SGBV%20National%20Action%20Plan.pdf

SAATHII (2021), Media release, https://docs.google.com/document/d/1JSwXmjwdLE0-UHnliDRmj6k6ijPfikb6/edit

The Indian Express (2019), https://indianexpress.com/article/cities/delhi/delhi-transgender-sensitisation-workshops-schools-trans-inclusion-5825942/

Sri Lanka Supreme Court - Access to education of people living with HIV/AIDS, Right to Education Initiative (right-to-education.org)

The Industrial Disputes Act, http://www.labourdept.gov.lk/images/PDF_upload/chapter01/1_industrial_disputes_acti.pdf

The Ragging Act, https://eugc.ac.lk/rag/downloads/Act_No_20_EN.pdf

UNICEF Programme Report (2012-2016), Peacebuilding, Education and Advocacy in Conflict-Affected Context Programme, https://files.eric.ed.gov/fulltext/ED573879.pdf Also see: https://www.ft.dk/samling/20191/almdel/uru/bilag/28/2102721.pdf

United Nations Free & Equal, Bullying and Violence in Schools, https://www.unfe.org/wp-content/uploads/2017/05/Bullying-and-Violence-in-School.pdf

UNESCO (2017), School Violence and Bullying: Global status report. http://unesdoc.unesco.org/images/0024/002469/246970e.pdf. Also see: https://www.unicef.org/srilanka/media/2321/file/Bullying%20Study-ENGLISH.pdf

Vision 2025: A Country Enriched, http://extwprlegs1.fao.org/docs/pdf/srl179513.pdf

World Bank. 2013. Inclusion Matters: The Foundation for Shared Prosperity, New Frontiers of Social Policy; Washington, DC. World Bank, https://openknowledge.worldbank.org/handle/10986/16195.

**Supported by**

KALEIDOSCOPE
INTERNATIONAL TRUST

EQUAL GROUND

"Equality for all Sexual Orientations and Gender Identities: Human Rights for Everyone"

"සියලුම ලිංගික දිශානතීන් සහ ස්ත්‍රී පුරුෂ සමාජභාව අනන්‍යතාවයන් ඇති මිනිසුන්ට සමානාත්මතාවය: සැමට මානව අයිතිවාසිකම්"

"அனைத்து பாலியல் நாட்டத்திற்கும் மற்றும் பாலினம் அடையாளங்கலுக்கும் ஒரே சமத்துவம்:எல்லேருக்கும் மனித உ்ரிமைகள"


Tel: +94-11- 4334277/ +94-11- 4334278 / +94-11- 4334279

www.equal-ground.org
EQUALGROUND
equalground.srilanka
equalground123
_equalground_
+94-11-2075414